மாலை முரசு

பக்கங்கள் 16+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 21 செவ்வாய்க்கிழமை 10.11.2024 | அதிர்வு 131

## அமெரிக்காவுக்குள் நுழைய இருவருக்குத் தடை விதிப்பு



ஸ்ரீலங்கன் விமான சேவையின் முன்னாள் பிரதம

04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




## இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளுக்கு இறப்புச் சான்றிதழ் பதில் என்றால் கொலை செய்தவன் யார்?

# சர்வதேச நீதியே எமக்கு வேண்டும்!

## தமிழர் தாயகத்தில் உறவுகள் கண்ணீருடன் கோஷம்





(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன், கனகராசா சரவணன், கி.வசந்தன்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் இன்று தமிழர் தாயகத்தில் மாபெரும் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இதன்போது, "உள்ளகப் பொறிமுறை வேண்டாம்! சர்வதேசம் நீதியே வேண்டும்." - என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய 8 மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சிவில் அமைப்பினர், பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

02

# சர்வதேச நீதியே எமக்கு வேண்டும்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

”கொலைகாரனால் நீதி வழங்க முடியுமா?, பிள்ளைகளைத் தினம் தேடிக்கொண்டே நீதியின்றியே இறந்து கொண்டிருக்கின்றோம், ஓ.என்.பி. ஒரு கண்துடைப்பு நாடகம், கொடுப்பனவு களைக் கொடுப்போம் என்று செல்வது கொலை செய்த கதையை மறைக்கவே, உங்கள் இராணுவத்தை நம்பி கையில் ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படிக் காணாமல் ஆக்கப்பட்டார்கள்?, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும் பங்களை மிரட்டுவதையும் அச்சுறுத்து வதையும் நிறுத்துங்கள், இராணுவத் தினரிடம் ஒப்படைக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளுக்கு இறப்புச் சான்றிதழ் பதில் என்றால் கொலை செய்தவன் யார்?, எங்கே எங்கே உறவுகள் எங்கே?, சர்வதேச நீதியே எமக்கு வேண்டும்” – என்று கண்ணீர்மல்கக் கோஷங்களை எழுப்பிய போராட்டக்காரர்கள், பதா தைகளையும் தாங்கி நின்றனர்.


















# புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்குங்கள்!

## அநுர அரசிடம் ருத்ரகுமாரன் வலியுறுத்து

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவும், இலங்கை அரசமைப்பின் 6 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்யவும் மற்றும் ஈழத் தமிழர்கள் கருத்துச் சுதந்திரத்துடன் அரசியல் களத்தில் ஈடுபடும் சூழ்நிலையை உருவாக்குமாறும் இலங்கை அரசிடம் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.ருத்ரகுமாரன் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

இது தொடர்பில் ருத்ரகுமாரன் மேலும் தெரிவித்ததாவது:-

"நீங்கள் ஜனதா விமுக்தி பெரமுனா (ஜே.வி.பி.)ஸ ஆயுதப் போராட்டத்தை ஒன்றல்ல, இரண்டு தடவைகள் முன்னெடுத்தீர்கள்.

இருந்தும் உங்கள் மீதான தடை நீக்கப்பட்டு சுதந்திரமாக அரசியலில் ஈடுபட அனுமதி அளிக்கப்படவில்லையா?

உங்களுக்கு ஒரு நியாயமும், தமிழ் விடுதலைப் போராளிகளுக்கு இன்னொருநியாயமும்இருக்கும்போது இதை நாம் எப்படி இனப் பாகுபாடாக பார்க்காமல் இருக்க முடியும்?

உங்கள் ஆட்சியிலும் அணுகுமுறையிலும் தமிழ் மக்களுக்குப் போராட வேண்டிய அவசியம் இருக்காது என்று நீங்கள் கூறுகிறீர்கள். நீங்கள் கூறுவதில் உண்மை இருப்பதாக நீங்கள் நம்பினால், 6 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கிவிட்டு சுதந்திரமான அரசியல் நடவடிக்கைக்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கு நீங்கள் ஏன் அஞ்ச வேண்டும்?

தமிழர் தாயகத்தில் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் ஒரு பொது வாக்கெடுப்பை நடத்த ஏற்பாடு செய்யுங்கள். தமிழ்த் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மற்றைய தெரிவுகளில் ஒரு சுதந்திரமான தமிழீழ நாடு என்ற விருப்பத்தையும் உள்ளடக்குங்கள். தேவைப்பட்டால், நீங்கள் ஒற்றையாட்சியையும் ஒரு தெரிவாகச் சேர்க்கலாம்.

தமிழ் மக்கள் ஒற்றையாட்சித் தெரிவை ஏற்றுக்கொண்டால், தமிழ் மக்கள் உங்கள் மீது உண்மையாக நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்வோம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் அரசியல் தலைமையை வகித்த போது, இலங்கை அரசும் சர்வதேச சமூகமும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் இருப்பதற்குப் புலிகளே காரணம் எனப் புலிகள் மீது பழி சுமத்தியது.

தற்போது 15 வருடங்கள் கடந்தும், ஜதமிழ்ஸ தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாக, தமிழீழ விடுதலைப் புலிகள் உச்சக்கட்டத்தில் இருந்த போது இலங்கை அரசின் மீது சர்வதேச சக்திகளால் பிரயோகிக்கப்பட்ட கடுமையான அரசியல் அழுத்தங்கள் தற்போது குறைபாடடைந்து தமிழ்த் தேசியப் பிரச்சினையை முற்றாகப் புறக்கணிக்கும் அளவுக்கு மங்கிப் போய்விட்டது.

சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனையால் சிங்கள அரசியல் இறுகியிருப்பதால் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் வெளி இல்லாமல் போய் விட்டது என்பதே உண்மை. அத்துடன் தீர்வு காணும் அரசியல் கலாசாரம் சிங்கள அரசியலில் இல்லை. இதற்கான அரசியல் விருப்பமும் சிங்கள அரசியலில் இல்லை.

மகாவம்ச சிந்தனையிலிருந்து இத்தகைய கலாசாரம் மற்றும் மனப் போக்கு (தமிழர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு எதிரானது) வளர்ந்துள்ளது என்பது பல ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும்.

எமது மாவீர தியாகிகளைத் தமிழ் ஈழத் தனிநாடு கோரி போராட வற்புறுத்திய இலங்கையின் அதே அரச அமைப்பு தான் இன்றுவரை தொடர்கின்றது.

வெவ்வேறு ஆட்சியாளர்கள் காலத்துக்குக் காலம் மாறி வந்தாலும் சிங்கள பௌத்த ஆதிக்க அரச கட்டமைப்பில் மாற்றம் ஏற்படவில்லை. மாறாக, எந்தச் சீர்திருத்தத்தையும் அனுமதிக்க முடியாத அளவுக்கு இலங்கை அரச கட்டமைப்பு மிகவும் இறுக்கமாக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் நிலையும் இதுதான். நீதித்துறையின் நிலையும் இதுதான்.

பல தேசிய சமூகங்களைக் கொண்ட எந்தவொருநாட்டிலும், எண்ணிக்கையில் பெரும்பான்மையைக் கொண்ட ஒரு தேசம் தன் விருப்பத்தை ஜனநாயகத் தேர்தல்கள் மூலம் மற்ற தேசங்கள் மீது திணிக்க முடிந்தால், அது ஜனநாயகம் அல்ல மாறாக அது இனநாயகம்.

இலங்கைத் தீவில் தற்போது நிலவுவது ஜனநாயகம் அல்ல, இன நாயகமே.

2009ஆம் ஆண்டு முதல் தேர்தல் மற்றும் ஆட்சி மாற்றம் ஏற்படும் போதெல்லாம் புதிய அரசமைப்பின் மூலம் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்படும் என்று கூறப்படும். இந்த விடயத்தில் உரத்த ஆரவாரங்களும் இருக்கும்.

எமது தமிழ்த் தலைவர்கள் பலர் இந்தப் புதிய அரசமைப்பு வாக்குறுதியின் பின்னால் ஓடி மக்களுக்குப் பொய்யான நம்பிக்கையை வழங்குவார்கள். தமிழ்த் தேசியப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்குக் காரணம், தமிழ் தேசத்தின் உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் அரசமைப்பில் இடம்பெறவில்லை என்பதல்ல, மாறாக அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அரசியல் வெளி - அரசமைப்பில் பொறிக்கப்பட்டிருந்தாலும் - இல்லாததுதான். கடுமையான சிங்கள - பௌத்த அரச கட்டமைப்பு காரணமாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் கடந்த 30 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது ஒரு எடுத்துக்காட்டு.

தமிழரின் தேசிய அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் பலவீனம் காரணமாக தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் ஆசனங்களைப் பெற்றது. இந்தச் சூழலில், தேசிய மக்கள் சக்தியின் "ஊழல் ஒழிப்பு" என்பது தமிழ் மக்களைக் கவர்ந்த சுருதியாக இருந்தது.

மாவீரர்களின் நினைவுகள் இருக்கும் வரை, தமிழ்த் தேசத்தை எவராலும் கபளீகரம் செய்ய முடியாது." - என்றார்.

# வவுனியாவில் தீச்சட்டியை ஏந்தி நீதி கேட்டு போராடிய காணாமல்போனோரின் உறவுகள்





(கி.வசந்தன்)

சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

வவுனியா, கந்தசாமி ஆலயத்திற்கு முன்பாக இன்று ஆரம்பமாகிய குறித்த பேரணி அங்கிருந்து பசார் வீதி வழியாக வந்து பழைய பஸ் நிலையப் பகுதியில் முடிவடைந்தது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தீச்சட்டியை ஏந்தி நீதி கேட்டுப் போராடினார்கள்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த அவர்கள்,

“இது அன்னையர் தினமோ, ஆசிரியர் தினமோ எனக் கூறி கடந்து செல்ல முடியாது. இது மனித உரிமைகள் தினம். மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். எம் உயிருக்கும் மேலான வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கேட்டுப் போராடிக் கொண்டிருக்கும் எம்மையும் மதிக்க வேண்டும். மனித உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும்.

ஆனால், இலங்கையில் பல்லாயிரம் உயிர்கள் கொல்லப்பட்டும் பல்லாயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர். இதுவரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிய 300 இற்கும் அதிகமான உறவுகள் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உறவுகளை இனி யார் தேடுவது?

எப்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கானசர்வதேசநீதிகிடைத்து எம்மைப் போல் அழுபவர்களின் குரல் ஓய்கின்றதோ. அன்றுதான் எமக்கு மனித உரிமைகள் தினம் என வலியுறுத்தி நிற்கின்றோம்.” - என்றனர்.

# மோட்டார் சைக்கிள் மீது ரயில் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு



சிலாபம், வட்டக்கல்லிய ரயில் கடவையில் மோட்டார் சைக்கிள் மீது ரயில் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த மற்றொரு இளைஞர்தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சிலாபம், வட்டக்கல்லிய பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய தினுக ஷஷேந்திர பெரேரா என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்த இளைஞரின் தாய், தந்தை மற்றும் சகோதரர்கள் இருவர் சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்காவுக்குச் சென்றனர் எனவும், அவருக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக தினுகவை அங்கு அழைத்துச் செல்ல முடியவில்லை எனவும் ஆவணங்கள் சரி செய்யப்பட்ட பின்னர் அவரும் அமெரிக்கா செல்லவிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பசிந்து தேத்மிக பெர்னாண்டோ 20 வயதுடைய இளைஞர், விபத்தில் படுகாயமடைந்து தற்போது சிலாபம் பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். அவரும் தொழிலுக்காக வெளிநாடு செல்லத் தயாராகி வந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், வட்டக்கல்லிய ரயில் கடவையில் சமிக்ஞை அமைப்பு செயற்படாததால் ரயில் சமிக்ஞை பராமரிப்பு பிரிவு அதிகாரிகள் வந்து ஒரு வாரத்துக்கு முன்னர் அதனைச் சரி செய்துள்ள போதும், சிவப்பு ஒளி சமிக்ஞை மாத்திரம் 24 மணித்தியாலமும் ஒளிர்ந்துக் கொண்டிருந்தது என்று அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ரயிலில் மோதிய போது, ரயில் கடவையில் முதியவர் ஒருவர் கடமையில் இருந்தார் எனவும், ரயில் வருதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த காரணத்தால் ரயில் கடவையின் இரு பக்கங்களிலும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது அதனை அவதானிக்காது வந்த மோட்டார் சைக்கிள் ரயில் வீதியில் வந்த வேகத்தில் நுழைந்தது எனவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

அமெரிக்காவுக்குள்...

நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன மற்றும் ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மீது அமெரிக்கா தடைகளை விதித்துள்ளது.

சர்வதேச ஊழல் எதிர்ப்புத் தினம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தினத்துடன் இணைந்து, உலகெங்கிலும் உள்ள ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதில் அதன் உறுதிப்பாட்டை வலியுறுத்தும் வகையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இதன்படி, ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தால் எயார்பஸ் விமானங்களை அதிக விலைக்குக் கொள்வனவு செய்வதை உறுதிப்படுத்துவதற்காக இலஞ்சம் பெற்றார் என்று கபில சந்திரசேன மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை விமானப் படைக்கு மிக் விமானங்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பான ஊழல் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தார் என்று உதயங்க வீரதுங்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் காரணமாக அவர்கள் அமெரிக்காவுக்குள் நுழையத் தகுதியற்றவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை அரசாங்கம் மட்டுமல்ல சர்வதேசமும் தமிழரை ஏமாற்றுகிறது!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவிப்பு






கடந்த பதினைந்து வருடங்களாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மார்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய சர்வதேச விசாரணை வேண்டும்.

இவ்வாறு போராடுபவர்களை இலங்கை அரசு ஏமாற்றுகிறது. இதைப் போல் சர்வதேசமும் தமிழினத்தை ஏமாற்றிவருகிறது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளராக போட்டியிட்டு 226322, வாக்குகளை பெற்று இலங்கையில் ஐந்தாம் இடத்தைப் பெற்றவரும், தமிழ்தேசியவாதியுமானபா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமை தினமான இன்று (10) மட்டக்களப்பு தந்தை செல்வா சதுக்கத்தில் இருந்து காந்தி சதுக்கம் வரையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் நடத்தப்பட்ட பேரணியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை ஆட்சியாளர்களின் ஜனாதிபதிகளின் பெயர்களும் தோற்றங்களும் மாறுகிறதே தவிர அவர்களுடைய செயல் இன்னும் மாறவில்லை. ம, மை, கோ, ர, அ, என முன் எழுத்துள்ள பெயர்களை மாற்றி உருவங்கள் ஆட்சிபீடம் ஏறினாலும் உண்மையில் அவர்கள் எவருமே தமிழர்களுக்கான அரசியல் தீர்வு, இனப்படுகொலைக்கான நீதி எதையுமே தருவதற்குத் தயாராக இல்லை.

இலங்கை அரசின் நீதியில் நம்பிக்கை இல்லாத காரணத்தால்தான் சர்வதேச நீதி தேவை என்று அனைத்துலக சமூகத்திலும், ஐ. நா. மனித உரிமை ஆணையகத்திலும் தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், மனித உரிமை அமைப்புகளும் கடந்த பதினைந்து வருடங்களாக போராடியும், சர்வதேச நாடுகளுகளுக்குச் சென்று முறையீடு செய்தும் வருகிறோம்.

அதைவிட புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் 15 வருடங்களாக ஓயாமல் உழைத்து வருகின்றோம்.

ஆனால், சர்வதேசமும் இலங்கை அரசைப் போன்றே தமிழினத்தைப் பதினைந்து வருடங்களாக ஏமாற்றியுள்ளது. அப்படியானால் இனி யாரிடம் எமக்கான நீதியை எதிர்பார்ப்பது.- என்றார்.



# இனந்தெரியாத நபரின் சடலம் மகாவலி ஆற்றில் மீட்பு!

(க.கிஷாந்தன்)

மகாவலி ஆற்றில் மிதந்து கொண்டிருந்த சடலம் ஒன்று இன்று (10) மீட்கப்பட்டது என்று நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி ஹப்புகஸ்தலாவ பிரதான வீதியில் மல்லந்த பாலத்தின் கீழ் மகாவலி ஆற்றில் சடலம் ஒன்று மிதப்பதாக கிடைத்த தகவலின் பேரில் நாவலப்பிட்டி பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டுள்ளனர்.

40-45 வயது மதிக்கத்தக்க இனந்தெரியாத நபரின் சடலம் தொடர்பில் நாவலப்பிட்டி நீதிவானின் பரிசோதனையின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படும் என்று நாவலப்பிட்டி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஊழல் பேர்வழிகள்

பாரியளவிலான ஊழல் மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் இலங்கைப் பிரமுகர்கள் இருவருக்கு எதிராக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தடைகள் மற்றும் வீசா கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

'ஸ்ரீலங்கன்' எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன மற்றும் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க ஆகிய இருவரின் குடும்பத்தவர்ளுக்கே இந்தப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படைக்கு மிக் ரக விமானங்களைக் கொள்வனவு செய்ததில் ஊழல் மோசடியில் ஈடுபட்டார் என ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு எயார்பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தில் கையூட்டல் பெற்றார் என நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் ஊழல் குற்றவாளிகளைப் பொறுப்புக்கூற வைக்கும் அமெரிக்க முயற்சிகளின் ஒரு பகுதியாகும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் மற்றும் மனித உரிமைகள் தினத்திற்கு முன்னதாக நடவடிக்கைகளை அறிவித்து, அமெரிக்க வெளியுறவுத்துறை உலகளவில் ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதில் அதன் உறுதிப்பாட்டை வலியுறுத்தியுள்ளது என்றும் அந்தத் திணைக்களம் சுட்டிக் காட்டியது.

குறிப்பிடத்தக்க அளவு பாரிய ஊழல் விடயங்களில் ஈடுபட்டமைக்காக வெளிநாடுகளைச் சேர்ந்த ஓர் அதிகாரி உட்பட 14 பிரமுகர்களினதும் அவர்களின் உடனடி குடும்ப உறுப்பினர்கள் மீதும் அமெரிக்க வெளியுறவுத் துறை இத்தகைய நடவடிக்கையை எடுத்திருக்கின்றது. அதில் இருவரே மேற்படி இலங்கையர்கள்.

மொத்த மனித உரிமை மீறல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே இந்த ஊழல் விவகாரங்களை அமெரிக்க வெளியுறவுத் துறை கருத்தில் எடுத்து இந்த அறிவிப்பை விடுத்திருக்கின்றது.

இலங்கையில் பாரிய ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் எனக் குறிப்பிடப்படும் இந்த இருவருக்கும் எதிராக ராஜபக்ஷ காலத்தில் பெரும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. பரபரப்பாக செய்திகள் வெளியாகின. ஆயினும் நடவடிக்கைகள் எதுவும் உரிய முறையில் எடுக்கப்படவில்லை.

கபில சந்திரசேன கைதாகிப் பின்னர் பிணையில் வந்தார். அவர் இருபது லட்சம் டொலர் கையூட்டுப் பெற்றார் என்பது லண்டன் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

யுத்த காலத்தில் மிக் ரக யுத்த விமானக் கொள்வனவு பேரத்தில் சம்பந்தப்பட்டவர் என கருதப்படும் இலங்கையின் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு மிகவும் நெருக்கமான உறவினராவார். 2015 இல் மஹிந்த ஆட்சி வீழ்த்தப்படும் வரை மிக செல்வாக்காக இருந்தவர். இந்த மிக் பேர ஊழலில் 15 லட்சம் அமெரிக்க டொலரைச் சுருட்டியவர் எனக் கருதப்படுகின்றது. பின்நாளில் டுபாயில் சர்வதேசப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டாராயினும் அவர் மீது இலங்கைச் சட்டங்கள் சரிவரப் பாயவேயில்லை என்பதுதான் உண்மை.

மிக் விமான கொள்வனவு தொடர்பாக அவரையும், அச்சமயத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவையும் தொடர்புபடுத்தி, பல கேள்விகளை எழுப்பி, தொடர் புலனாய்வு தகவல்களைக் கட்டுரை வடிவத்தில் வெளியிட்டு வந்த பிரபல ஆங்கில நாளிதழான 'த சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மேற்படி மிக் ஊழல் பற்றிய விடயங்களை அம்பலப்படுத்திய காரணத்துக்காகவே அவர் படுகொலை செய்யப்பட்டார் என்ற கருத்தும் ஆழமாக ஊடுருவி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் பெரும் ஊழல்களில் ஈடுபட்டவர்கள் மீது அமெரிக்கா நடவடிக்கை எடுக்க, இலங்கையோ அவை தொடர்பில் வாளாவிருப்பது இந்த நாட்டில் ஊழல், மோசடி, லஞ்ச லாவண்யம் தடுப்பார், கேட்பாரின்றித் தலை விரித்தாடுகின்றது என்பதற்கான மற்றொரு அடையாளம்தான்.

இனியாவது இந்த விடயங்களில் காத்திரமான விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மேற்படி ஊழல், மோசடிகள், லஞ்ச விடயங்களை அடியோடு ஒழிப்போம் என்ற வாக்குறுதியை மக்களுக்குக் கொடுத்து, அதன் பேரில் அதிகாரத்துக்கு வந்துள்ள புதிய அரசு தவறாமல் முன்னெடுக்க வேண்டும்.

# வெள்ள அனர்த்த அழிவு தொடர்பில் விவசாய அமைப்பினருடன் சந்திப்பு

## தாஹிர் எம்.பி. கலந்துரையாடல்



(எஸ்.அஷ்ரப்கான்)

காலநிலை சீற்றத்தால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் பாதிப்பிற்குள்ளான அம்பாறை மாவட்ட விவசாயிகளின் வேளாண்மை காணிகள், வாய்க்கால்கள் குறித்த பிரச்சினைக்கான தீர்வுகளை ஆராயும் நோக்கில் நேற்று திங்கட்கிழமை (09) நிந்தவூர் பிரதேச சபையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றிருந்தது.

இதில் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர், நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் முஹம்மட் அஸ்கி , விவசாயத் திணைக்களத்தின் நிந்தவூர் பெரும்போக உத்தியோகத்தர் ஹாரலிக் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இயற்கை சீற்றத்தால் பதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கான இழப்பீடுகள் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது. சேதமடைந்துள்ள வயல் பிரதேச வீதிகள், வடிச்சல் வாய்க்கால் போன்றவற்றை மீள் சீரமைப்பதற்குத் தேவையான பொறிமுறைகளைத் துறைசார் நிபுணத்துவம் உள்ளவர்களிடம் கேட்டறிந்து கொண்டதுடன் இந்த விடயங்களுக்கான விரைவான தீர்வை நோக்கி தான் பயணிப்பார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்திருந்தார்.



# கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நஸீர்!



(அபு அலா)

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து, கட்டடங்கள் மற்றும் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் செயலாளராக எம்.எம்.நஸீர் தனது கடமைகளை நேற்று (09) பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, கடந்த 06 ஆம் திகதி மாகாண அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்களை நியமித்து அவர்களுக்கான கடிதங்களையும் வழங்கி வைத்தார்.

இதன்போது, இலங்கை நிர்வாக சேவையில் விஷேட தரத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியான எம்.எம்.நஸீருக்கு வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கான கடிதத்தை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களென பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, கல்முனை பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த ஜே.லியாக்கத் அலி கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும் கடமை பொறுப்பேற்றுக்கொண்டார்.



# அனர்த்தத் தடுப்புச் செயற்பாடும் துறைசார்ந்தோர் கௌரவிப்பும்



(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை -05, கிராம அபிவிருத்தி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட அனர்த்தத் தடுப்பும் அதிலிருந்து மீண்டெழும் நடைமுறைகளும் எனும் தொனிப் பொருளிலான நிகழ்வு அட்டாளைச்சேனை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளரும், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவருமான எம்.ஏ.சி. எம்.றியாஸ் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வின் போது திருகோணமலை மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என்.எம்.அப்துல்லாஹ், கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.சம்சுதீன் ஆகியோர் முன்னிலை அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது அனர்த்தத் தடுப்பு விழிப்புணர்வு தொடர்பான விஷேட கருத்துரைகள் வழங்கப்பட்டது. அனர்த்த காலங்களில் சமூக நோக்கோடு செயற்பட்டு தன்னை அர்ப்பணித்து சேவையாற்றியவர்கள் பலர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு அட்டாளைச்சேனை ஐந்தாம் பிரிவுக்கான அனர்த்த முகாமைத்துவக் குழு அங்கத்தவர்களுக்கான அடையாள அட்டை மற்றும் நியமனக் கடிகதங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை, கடந்த முறை நடைபெற்ற உயர் தரப் பரீட்சையில் சித்தி பெற்று மருத்துவ பீடத்துக்குத் தெரிவான அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த எட்டு மாணவர்கள் இதன் போது நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அலுவலகமும் இதன்போது வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது பல்துறை சார் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலும், கல்வி அபிவிருத்தி தொடர்பிலும் துறைசார் முக்கியஸ்தர்களால் விஷேட சொற்பொழிவுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.








# தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் மக்கள் மீள்குடியமர்த்தப்படுதல் வேண்டும்!

## அழுத்தங்களைப் பிரயோகிப்போம் என்கிறார் ரவிகரன் எம்.பி.





**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழர்களின் பூர்வீக கிராமங்களான தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம் கிராமங்களில் மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும் என்றும் அதற்காக உரியதரப்பினருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் எனவும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது தண்ணிமுறிப்பு கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்ட மக்கள் சிலருடன் கலந்துரையாடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 1984 ஆம் ஆண்டு ஆண்டான்குளம் மற்றும், தண்ணிமுறிப்பில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்கள் இராணுவக் கெடுபிடிகள் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த ஆண்டான்குளம் மற்றும், தண்ணிமுறிப்பு பகுதிகளைச் சேர்ந்த மக்கள், தமது இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து 40வருடங்களாகியுள்ளன. எனினும் இதுவரை மீளக்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்களை மீள்குடியமர்த்துவதற்காக உரியதரப்பினருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

குருந்தூர் மலை வழிபாடுகளைத் தொடர்ந்து, தொல்லியல் திணைக்களத்தின் இடையூறால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள குருந்தூர்க்குளத்தின் அபிவிருத்தி வேலைகள் தொடர்பிலும் நாடளுமன்ற உறுப்பினர் அவதானம் செலுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# மலசல கூட குழி நிர்மாணத்தின்போது தவறி விழுந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு!

## சாய்ந்தமருதுவில் சம்பவம்





(பாறுக் ஷிஹான்)

கடை ஒன்றின் கட்டுமான வேலை தளத்தில் இடம்பெற்ற அனர்த்தம் ஒன்றில் மரணமடைந்த இளம் குடும்பஸ்தரின் சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதான வீதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கடை தொகுதியில் வேலையில் ஈடுபட்ட வர்கள் சிக்கிக் கொண்ட அனர்த்தம் ஒன்றில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார். மற்றுமொருவர் காயங்களுடன் மீட்கப்பட்டு கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலையில் தீவிர சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை நேற்று முன் தினம் (08) மாலை சம்பவ இடத்துக்கு வருகைதந்த கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் ரசீட் முஹம்மது கலீல் சடலத்தை பார்வையிட்டு விசா ரணை மேற்கொண்டதுடன் பின்னர் அவர்களின் கட்டளையின் பிரகா ரம் கல்முனை ஆதார வைத்திய சாலைக்கு உடற்கூற்று பரிசோதனைக் காக எடுத்து செல்லப்பட்டு சட்ட வைத் திய அதிகாரியின் மரண விசாரணை நடவடிக்கையின் பின்னர் உறவினர்க ளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த மரணம் மூச்சுத் திணரல் காரணமாக ஏற்பட்டதா? அல்லது வேறு காரணமாக மரணம் சம்பவித்துள் ளதா என்பதை கண்டறிய கொழும்பில் உள்ள பகுப்பாய்வு திணைக்களத்துக் குச் சடலத்தின் சில பகுதிகள் அனுப்பி வைக்கப்பட்டள்ளன.

சம்பவத்தில் 12 நாள் ஆண் குழந்தை ஒன்றின் தந்தையான சாய்ந்த மருது பிரிவு 16 அஹமட் வீதியை சேர்ந்த அப்துல் மஜீட் மஹ்தி அஹாஸ் அஹமட் (வயது-29) என்பவரே புதி தாக நிர்மாணிக்கப்பட்ட மலசலகூட குழியில் தவறி விழுந்து உயிரிழந்த வராவார். அவரைக் காப்பாற்றுவதற்காக உடனடியாக செயற்பட்ட மாவடிப்பள்ளி பகுதியைச் சேர்ந்த இஸ்மாயில் றிபான் (வயது-42) என்பவர் காயமடைந்து அபாயக் குரல் எழுப்பிய நிலையில் ஏனையோரால் மீட்கப்பட்டு சிகிச்சைக் காக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு மருந்துப் பொருள்கள் அன்பளிப்பு



(சியாத்.எம்.இஸ்மாயில்)

நாடளாவிய ரீதியில் அரச வைத் தியசாலைகளில் நிலவும் மருந் துத் தட்டுப்பாடு மற்றும் பிரதேச நோயா ளர்களின் அவசிய தேவைகளைக் கருத்தில் கொண்டு பாலமுனை யைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் வை.எல். சிறாஜின் தாயார் வை.எல். ஹாஜறாவால் ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தி யட்சகர் டாக்டர். ஐ.எம். ஜவாஹிரிடம் நேற்று (09) கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், பொது சுகாதார பிரிவு பொறுப்பு வைத்தியர் டாக்டர். எப்.எம்.ஏ.காதர், வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தின் செயலாளரும் தாதிய உத்தியோகத்தருமான எஸ். யோகராஜா, நிர்வாக உத்தியோகத் தர் கே.விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தில் மருத்துவ முகாம்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட சாய்ந்தமருது வொலிவேரியன் கிராம மக்களுக்கு இலவச நடமாடும் மருத்துவ முகாம் திங்கட்கிழமை சாய்ந்தமருது பல் நோக்கு கட்டடத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஜி சுகுணன் மற்றும் வைத்திய குழாமினர் கலந்து கொண்டனர்.



சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது வொலிவேரியன் கிராமத்துக்கு உட்பட்ட நூற்றுக் கணக்கான மக்கள் இந்த இலவச மருத்துவ முகாமில் கலந்து கொண்டனர்.



# இஸ்லாமாபாத் கழிவு நீர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஆதம்பாவா எம்.பி. நடவடிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

இஸ்லாமாபாத் வீட்டுத் திட்டத்தில் நீண்ட காலமாக நிலவி வரும் கழிவு நீர் பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா மற்றும் கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் உள்ளிட்ட அதிகாரிகள் நேற்று திங்கட்கிழமை (09) மாலை அங்கு கள விஜயம் மேற்கொண்டனர்.

இஸ்லாமாபாத் வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் பொது மக்கள் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் பொருட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா கல்முனை மாநகர சபைக்கு விஜயம் செய்து, மாநகர ஆணையாளருடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடியதை அடுத்தே அதிகாரிகள் சகிதம் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

கல்முனை மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், உள்ளூராட்சி உத்தியோகத்தர் எம். சர்ஜுன், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம். நுஸைர் உள்ளிட்டோரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது குறித்த பிரச்சினைக்கு விரைவாக நிரந்தரத் தீர்வு காண்பதற்கான மூலோபாய திட்டங்கள் தொடர்பிலான ஆலோசனைகள் பரிசீலிக்கப்பட்டது. அத்துடன் சாத்தியமான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# தடைகளை உடைத்து சாதனை படைத்த யதுர்சிகாவால் வன்னிக்குப் பெருமை!





(எஸ்.ஆர்.லெம்பேட், விஜயரத்தினம் சரவணன்)

மன்னார், தோட்டவெளி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவியான அன்ரன் ஜேசுதாசன் யதுர்சிகா பல தடைகளைக் கடந்து ஈட்டி எறிதலில் தேசிய ரீதியில் தங்கத்தை சுவீகரித்து ஒட்டுமொத்த வன்னி மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு யதுர்சிகாவின் சாதனைப் பயணமானது தொடர்ந்து ஆசிய மற்றும், சர்வதேச ரீதியிலும் வியாபிக்க வேண்டும் என்று ரவிகரன் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் மட்ட தேசிய மெய்வல்லுனர் போட்டியில், மகளிருக்கான ஈட்டி எறிதல் போட்டியில் 37.37 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்து மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி அன்ரன் ஜேசுதாசன் யதுர்சிகா தங்கம் வென்று சாதனை படைத்தார்.

இந்த நிலையில் சாதனை மங்கை யதுர்சிகாவுக்கான தனது வாழ்த்துச் செய்தியிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

சாதனைப் பெண் யதுர்சிகாவால் ஒட்டுமொத்த வன்னிமண்ணும் பெருமையடைகின்றது.

பலத்த தடைகளையும் சோதனைகளையும், வேதனைகளையும் கடந்தே யதுர்சிகா இந்த சாதனையைப் படைத்திருக்கின்றார்.

யதுர்சிகா கல்வி கற்கின்ற தோட்டவெளி அரசினர் தமிழ் கலன் பாடசாலையில் விளையாட்டு மைதானம் இல்லை என்று சொல்லப்படுகின்றது.

அதேவேளை பயிற்சியில் ஈடுபட்டிருந்த காலத்தில் விபத்தொன்றில் சிக்கி அவர் பலத்த இன்னல்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்.

இவ்வாறாக பல சோதனைகளையும், வேதனைகளையும், தடைகளையும் கடந்துதான் யதுர்சிகா இந்த சாதனையைப் படைத்திருக்கின்றார்.

அந்தவகையில் யதுர்சிகா, சாதிக்கத் துடிக்கும் அனைத்து இளையோருக்குமான ஒரு முன்னுதாரணமாக அமைகின்றார்.

அவர் தேசியத்தைத் தொடர்ந்து இனி ஆசிய, சர்வதேச மட்டங்களிலும் சாதனை படைக்கவேண்டும். யதுர்சிகாவின் சாதனைப் பயணம் தொடரட்டும். அவரின் இலட்சியக் கனவுகள் மெய்ப்பட வாழ்த்துகிறேன் .- என்று தெரிவித்துள்ளார்.

# காதுகேள் கருவிகள் வழங்கிவைப்பு






(நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு முதியோர்களுக்கான சமூக சேவை அமைச்சின் கீழ் தேசிய செயலகத்தால் காதுகேள் கருவிகள் நேற்று (09) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அட்டாளைச்சேனை பிரதேச செயலர் இர்பான் நெறிப்படுத்தலின் கீழ் செயலகத்தின் முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஹைஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதில் சம்பந்தப்பட்ட வைத்திய நிபுணர் கலந்துகொண்டு பிரஜைகளுக்கு காதுகோள் கருவிகளை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் சமூகப் பிரிவுலுள்ள உத்தியோத்தர்களும் கலந்து கொண்டனர்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# முதியோரை இம்சைப்படுத்தும் சமூகம்...!





யே. வினிதா,
ஊடகத்துறை துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

பெற்ற பிள்ளைகள், உறவினர்களின் தொடர் தாக்குதல்களாலும் அநாகரிகமான வார்த்தை பிரயோகங்களாலும் பாதிக்கப்பட்ட பல முதியோர்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேறி வீதிக்கு வரும் நிலை இன்று உருவாகியுள்ளது.

வயது முதிர்ந்தவர்கள் பொதுவாக தமது பிள்ளைகளாலும் உறவுகளாலும் தொடர்ச்சியாக இம்சை படுத்தப் படுகிறார்கள். அனுபவம் மிக்க முதியவர்கள், சிறுவர்கள் என இருக்கும் வீடுகளில்தான் சந்தோசமும் நிறைவும் இருக்கும் என்று குறிப்பிட்டாலும் முதியவர்கள் தமக்கு ஒரு இடைஞ்சல் என்றே பலரும் நினைக்கிறார்கள்.

அதனால்தான் பெரும் வசதி படைத்த பிள்ளைகள் கூட தமது வயது முதிர்ந்த பெற்றோரை எங்கேயாவது அனாதைகளாக முதியோர் இல்லங்களில் தள்ளி விடுவதில் நாட்டம் கொண்டவர்களாக உள்ளனர்.

முதியவர்களை பாதுகாக்க வேண்டும். அவர்களுக்கான தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். சகல விடயங்களிலும் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என கூறப்படுவதுடன் அரசு முதியோர்களுக்கு உரிய சலுகைகளைப் பெறக்கூடியதாக விசேட அடையாள அட்டைகளையும் வழங்கி வருகின்றது.

எனினும் அரசு செயலகங்களிலும் சரி, வைத்தியசாலைகளிலும் சரி, போக்குவரத்து சேவைகளிலும் சரி அவர்களுக்கு உரிய இடம் வழங்கப்படுகின்றதா என்பது கேள்விக்குரியது. அரச அலுவலகங்களில் தமது தேவைக்காக செல்லும் முதியவர்களை நீண்ட நேரம் காத்திருக்க வைக்கப்படுகிறார்கள்.

முதியவர் தான் வந்த விடயத்தை கூறி அதை முடித்துத் தரும்படி கேட்டால், முகாமைத்துவ உத்தியோகத்தர்களான இளைஞர்கள் அதனை கவனத்தில் எடுக்காது தங்களுக்குள் சிரித்து கதைத்து பொழுதைப் போக்குகின்றனர்.

தற்செயலாக திரும்பிப் பார்த்து முதியவர் இருப்பதை கண்டு 'ஐயா கொஞ்சம் இருங்கள் ஆள் வரணும்' என்று அவரை சமாளிக்கிறார்கள்.

வைத்தியசாலைகளில் அவர்கள் படும்பாடு மிகவும் பரிதாபத்துக்கு உரியது. அனேகமாகத் தினமும் பெருந்தொகையான முதியவர்கள் மருத்துவ பரிசோதனைக்குச் செல்வதுண்டு. ஒருவர் தன்னை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்றால் மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அதிகாலையிலேயே முதியவர்கள் வந்த போதும் தனக்குரிய மருந்துகளை வாங்கிச் செல்வதற்காக ஒரு நாள் பொழுதை அங்கு செலவிட வேண்டியவராக இருக்கிறார்கள். அங்கு பணியாற்றும் ஊழியர்கள் தாங்கள் விரும்பியபடி எல்லாம் அந்த மூத்த மனிதர்களை ஆட்டிப் படைக்கிறார்கள்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நடைமுறைகளை ஏற்படுத்தி அவர்களை படாதபாடு படுத்துகிறார்கள். ஒரு நாளைக்கு கிளினிக் கொப்பிகளை மேசையில் அடுக்குங்கள் என்கின்றார்கள். மறுநாள் போய் கதிரையில் இருங்கள் வந்து வாங்குவோம் என்பார்கள். இன்னொரு நாளைக்கு அடுத்தக் கதிரையில் இருங்கள் என எழுப்பி விடுவார்கள்.

தமக்கு வேண்டப்பட்ட இளசுகள் வந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அளித்த பின்னரே முதியவர்களை நோக்குகிறார்கள். நாள் முழுவதும் வைத்தியசாலை வாங்கில் தவம் கிடந்து ஒருபடியாக மருத்துவ பரிசோதனையை முடித்துக் கொண்டு மருந்து வாங்க சென்றால் பசி தாகத்துடன் நீண்ட நேரம் கால் கடுக்க வரிசையில் நின்றாலும், அங்கும் ஊழியர்கள், இடையில் புகுந்து தமக்கு தேவையானவர்களிடம் இருந்து மருந்துக் கொப்பியை மருந்தாளரிடம் கொடுத்து வாங்கி கொடுக்கிறார்கள்.

நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்திருக்கும் இந்த முதியவர்களை தாமதம் இன்றி அனுப்பி வைக்க வேண்டும் என்ற சிந்தனை எள்ளவும் இல்லாதவர்களாக மருந்தாளர்கள் நடந்து கொள்வது குறித்து அவர்கள் மனம் வெறுத்துப் போவதை கவனிப்பார் யாருமே இல்லை.

வரிசையில் நிற்கும் முதியவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மருந்துகள் கூட முழுமையாக கிடைப்பதில்லை கால்கடுக்க நீண்ட நேரம் நின்றும், ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள்.

பஸ் பயணங்களிலும் அவர்கள் துன்பப்படுகின்றனர். நீண்ட தூர பயணங்களிலும் கூட அவர்கள் நிற்க வேண்டியுள்ளது. இருக்கைகளில் இருக்கும் இளசுகள் கண்டும் காணாதவர்களாக எங்கேயோ பார்க்கிறார்கள். அல்லது தொலைபேசியைப் பார்க்கின்றனர். மோட்டார் சைக்கிளில் வரும் இளைஞர்கள் வீதி ஒழுங்குகளைக் கடைபிடிப்பதில்லை. சைக்கிளில் செல்லும் முதியவர்களை பார்த்து 'சொல்லிட்டா வந்தீர்கள்' என்கிறார்கள். தனியார் பஸ்களில் நடத்துனர்களாக உள்ள இளைஞர்கள் பஸ் தரிப்பிடங்களில் இளம் பெண்களின் முதுகில் கையை வைத்து பௌவ்வியமாக உள்ளே ஏற்றி விடும் அதே சமயம் முதியவர்கள் எனின் 'அப்பு அல்லது ஆச்சி கெதியா ஏறுங்க' என்கிறார்கள்.

இளைஞர்கள் முந்திக்கொண்டு ஓடி இருக்கைகளை பிடிப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள். இளைஞர்களின் உலகம் இப்படி போய்க்கொண்டிருப்பதில் முதியவர்கள் விரக்தி அடைகிறார்கள். இளம் சமூகம் எல்லாமுமே இப்படி என்றல்ல. தமது பெற்றோர்களை மட்டுமின்றி ஏனைய முதியவர்களை மதித்து உதவுபவர்களும் உள்ளார்கள். இத்தகையவர்கள் மிகவும் குறைந்த அளவினரே. பெரும்பான்மையான இளைஞர்களிடம் இந்த நல்ல அம்சத்தை காண முடியாது.

முதியவர்களைக் கிண்டல் அடிப்பதிலும் உரிய மரியாதை வழங்காது சில்லறை கிண்டல்களை கையாள்வதும் ஏதோ தாங்கள் பெரிய சாதனையை நிகழ்த்தி விட்டதாக எண்ணி பெருமிதமாக நடந்து கொள்கின்றனர். இவர்கள் சமூகம் தம்மை எந்த அளவில் எடுத்துக் கொள்கின்றது என்பது பற்றி சிந்திக்க வேண்டும் நாளை நாங்களும் முதியவராகலாம் என்ற வாழ்வு நிலை தத்துவங்களை புரிந்து கொண்டால் தமது செய்கைக்காக நிச்சயம் வருத்தம் அடைவார்கள். அரசு விசேட அடையாள அட்டை வழங்கி விட்டால் முதியவர்களுக்கான கௌரவத்தை வழங்கியதாகவோ சிறுவர் முதியோர் தினம் என கொண்டாடிவிட்டால், முதியோர் எல்லோரும் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் வாழுகிறார்கள் என்று அர்த்தமில்லை.

அவர்களின் வாழ்வு குறித்த அனுமானங்களை சட்ட ரீதியாகவும் மனிதாபிமான முறையிலும் அணுகக்கூடிய வழிமுறைகளை இளைஞர்களை இணைத்துக் கொண்டு நடைமுறைப் படுத்த வேண்டும்.

# தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை இந்திய இறையாண்மைக்கு விடுக்கப்பட்ட சவால்

## அன்புமணி ராமதாஸ் தெரிவிப்பு



கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 40 தமிழக மீனவர்களை, இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளமை, இந்தியாவின் இறையாண்மைக்கு விடுக்கப்பட்டுள்ள சவால் எனப் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களுக்கு நீதிக்கோரி தமிழகத்தில் பல இடங்களில் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தற்போது, மீண்டும் 08 மீனவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் இந்த இறையாண்மைக்குச் சவால் விடுப்பதாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 2024ஆம் ஆண்டில் மட்டும் தமிழக கடற்றொழிலாளர்கள் 569 பேரை சிங்களக் கடற்படை கைது செய்துள்ளது. தமிழக கடற்றொழிலாளர்களுக்கு சொந்தமான 73 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் அன்புமணி ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

# மாற்றத்தின் வளர்ச்சி ஒவ்வொரு துறையிலும் தெரிகிறது: பிரதமர் நரேந்திர மோடி கருத்து

சீர்திருத்தம், செயல்திறன் மற்றும் மாற்றத்தின் வளர்ச்சி ஒவ்வொரு துறையிலும் தெளிவாக தெரிகிறது என பிரதமர் மோடி கூறியுள்ளார்.

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் உலகளாவிய முதலீடு உச்சி மாநாட்டை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அவர் உரையாற்றுகையில்,

“சீர்திருத்தம், செயல்திறன் மற்றும் மாற்றத்தின் வளர்ச்சியை ஒவ்வொரு துறையிலும் தெளிவாக காணமுடிகிறது. மிக நெருக்கடியான காலகட்டத்திலும், வலுவாக செயல்படக்கூடிய பொருளாதாரம்தான் இன்றைய உலகத்துக்கு தேவை. இதற்கு, இந்தியாவில் மிகப் பெரிய உற்பத்தி தளம் தேவை.

டிஜிட்டல் தொழில்நுட்பம் அனைவருக்கும் கிடைக்கச் செய்ததால், ஒவ்வொரு துறையும் பயன் அடைந்ததை இந்தியா உலகுக்கு காட்டியுள்ளது. இளைஞர் சக்தி இந்தியாவின் பண்டைய பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்கிறது. வளர்ச்சி, பாரம்பரியம் என்ற மந்திரத்தின் அடிப்படையில் நமது அரசு பணியாற்றி வருகிறது. இதன் மூலம் ராஜஸ்தான் மிகப் பெரிய பலனை அடைந்து வருகிறது.

சுதந்திரத்துக்குபின் அமைந்த அரசுகள் நாட்டின் வளர்ச்சிக்கோ, பாரம்பரியத்துக்கோ முக்கியத்துவம் அளிக்கவில்லை இதன் காரணமாக ராஜஸ்தான் இழப்பை சந்தித்தது. தற்போது ராஜஸ்தான் வளர்ச்சி மட்டும் அடையவில்லை, நம்பிக்கைக்குரியதாகவும் உள்ளது. ராஜஸ்தானுக்கு அனைத்தையும் ஏற்றுக் கொள்வதோடு, தன்னை காலத்திற்கேற்ப மேம்படுத்திக் கொள்ளவும் தெரியும். “– என்றார்.



# மணிப்பூரில் எரிக்கப்பட்ட சொத்து விவரத்தை தாக்கல் செய்யுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவு

மணிப்பூர் இனக் கலவரத்தில் எரிக்கப்பட்ட மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட சொத்து விவரத்தை தாக்கல் செய்யுமாறு அம்மாநில அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் கடந்த 2023 ஆம் ஆண்டு மே 3 ஆம் திகதி மைத்தேயி, குகி சமூகத்தினர் இடையே மோதல் உருவானது. இந்த மோதல் கலவரமாக மாறியதில் இரு தரப்பிலும் 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்து, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அம்மாநிலத்தில் தொடர்ந்து வன்முறை நிகழ்ந்து வருகிறது.

இதற்கிடையில் மணிப்பூர் கலவரம் தொடர்பான வழக்கில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம், மறுவாழ்வு மற்றும் இழப்பீடு வழங்குவதை மேற்பார்வையிட உயர் நீதிமன்ற முன்னாள் பெண் நீதிபதிகள் 3 பேர் கொண்ட குழுவை அமைக்க உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் உத்தரவிட்டது. மேலும் குற்றவியல் வழக்குகளில் விசாரணையை கண்காணிக்குமாறு மகாராஷ்டிர முன்னாள் பொலிஸ் தலைவர் தத்தாத்ரே பத்சல்கிகரை கேட்டுக்கொண்டது.

இந்நிலையில் மணிப்பூர் கலவரம் தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா, நீதிபதி சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது கலவரத்தின்போது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ எரிக்கப்பட்ட மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட வீடுகள் மற்றும் சொத்துகள் குறித்த விவரத்தை ‘சீல்’ வைக்கப்பட்ட கவரில் தாக்கல் செய்யுமாறு மணிப்பூர் அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.





# ரஷ்யாவால் ஏவப்பட்டன ‘ஓரேஷ்னிக்’ ஏவுகணைகள்

உக்ரைனிய நகரமான டினிப்ரோவில் ரஷ்யாவினால் ஏவப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் புதிய ரக ஏவுகணை தொடர்பான விபரங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

‘ஒரேஷ்னிக்’ என பெயரிடப்பட்டுள்ள இந்த ஏவுகணை கடந்த மாதம் 21 ஆம் திகதி முதன் முதலாக உக்ரைனுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்டது.

ஏவுகணை பிரயோகம் இடம்பெற்று ஒரு சில மணி நேரத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் ரஷ்ய தொலைக்காட்சி ஒன்றில் உரையாற்றிய போது, நேரடியாக நேட்டோ அமைப்பிற்கு அச்சுறுத்தலை வெளிப்படுத்தினார்.

உக்ரைனின் நேட்டோ நட்பு நாடுகளுக்கு எதிராக அதன் அடுத்த பயன்பாடு இருக்கக் கூடுமென அவர் மேற்கு நாடுகளுக்கு எச்சரிக்கையினை விடுத்தார்.

இந்த நிலையில், ரஷ்யாவின் மூலோபாய ஏவுகணைப் படையணிகளின் தலைவர் ஜெனரல் சேர்ஜி கரகாயேவ், ‘ஒரேஷ்னிக்’ கனரக அணு ஆயுதங்களை சுமந்து செல்லக்கூடியதுடன் எந்த ஐரோப்பிய இலக்குகளையும் துல்லியமாக தாக்கும் திறனைக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சாதாரணமாக 500 முதல் ஐயாயிரத்து 500 கிலோமீற்றர் தூரம் பயணிக்கக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளதெனவும் ரஷ்யாவின் மூலோபாய ஏவுகணைப் படையணிகளின் தலைவர் ஜெனரல் சேர்ஜி கரகாயேவ் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, கடந்த 2019 ஆம் ஆண்டில் வொஷிங்டன் மற்றும் மொஸ்கோவினால் கைவிடப்பட்ட சோவியத் ஒன்றிய கால ஒப்பந்தத்திற்கு அமைய, இந்த வகையிலான ஏவுகணை கள் தடைசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# துருக்கியில் இரு ஹெலிக்கொப்டர்கள் நடுவானில் மோதி விபத்துக்குள்ளாகின

நடுவானில் இரண்டு இராணுவ ஹெலிக்கொப்டர்கள் மோதியதில் ஒரு ஹெலிக்கொப்டர் தப்பிய நிலையில், மற்றொரு ஹெலிக்கொப்டர் விழுந்து விபத்துக்குள்ளானது.

துருக்கியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 5 வீரர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். ஒருவர் காயமடைந்த நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

துருக்கியின் தென்மேற்கு மாகாணமான இஸ்பர்ட்டாவில் வழக்கான பயிற்சியில் ஈடுபட்டபோது எதிர்பாராத வகையில் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டன.

இதில் ஒரு ஹெலிக்கொப்டர் பாதுகாப்பாக தரையிறங்கியதுடன் மற்றைய ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானது.

ஹெலிக்கொப்டர்கள் மோதிக் கொண்டமைக்கான காரணம் உடனடியாக தெரியவில்லை.

விபத்துக்குள்ளான ஹெலிக்கொப்டர் வயல்வெளியில் விழுந்து இரண்டாக உடைந்துள்ளதாக தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.





பக்கங்கள் 03

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 10/12/2024

## கனடாவில் அதிகளவில் களவாடப்படும் பொதிகள்

கனடாவில் அதிக அளவில் பொதிகள் களவாடப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றின் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

02




# கனடாவில் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கை குறைப்பு குறித்து அதிருப்தி

கனடாவில் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கை குறைப்பு குறித்து அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பம் செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக விண்ணப்பம் செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை 54 வீதமாக குறைவடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

மத்திய அரசாங்கம் குடிவரவு கொள்கைகளின் அடிப்படையில் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையை வரையறுப்பதற்கு தீர்மானித்து நடவடிக்கை எடுத்துள்ளது.

03




# ரொறன்ரோவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூவர் காயம்

ரொறன்ரோவில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு காயம் அடைந்தவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் ஈன தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் மூன்று ஆண்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதில் ஒருவர் உயிராபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி நபரிடம் இருந்து இரண்டு ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




# ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து பணியாளர்களை கவர்வதற்கு ஆல்பர்ட்டா மாகாணம் புதிய திட்டம்

## உள்ளூர் தொழிலாளர் யூனியன் தலைவர்கள் கவலை

ஆல்பர்ட்டா மாகாணம், ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து பணியாளர்களைக் கவர திட்டமிட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல், உள்ளூர் தொழிலாளர் யூனியன் தலைவர்களை கவலைக்குள்ளாக்கியுள்ளது.

கனடாவின் CBC News ஊடகத்திற்குக் கிடைத்த மின்னஞ்சல் ஒன்றில், 2025 ஆம் ஆண்டுக்கான சர்வதேச பணியாளர் தேர்வுத் திட்டத்துக்காக, ஆல்பர்ட்டா மாகாணம், ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து பணியாளர்களைக் கவர திட்டமிட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

நவம்பர் 5 திகதியிடப்பட்ட அந்த மின்னஞ்சலிலிருந்து, ஆல்பர்ட்டா மாகாண புலம்பெயர்தல் மற்றும் பன்முகக் கலாச்சாரத்துறையின் ஆலோசகர் ஒருவர், இந்த வேலை வாய்ப்புத் திட்டத்தில் இணைய விரும்புவோர் பின்பற்றவேண்டிய விடயங்கள் குறித்து ஆலோசனைகள் வழங்கியுள்ளது தெரியவந்துள்ளது.

அத்துடன், ஆல்பர்ட்டா எலக்ட்ரீசியன்கள் யூனியன் ஒன்று CBC News ஊடகத்திற்கு அனுப்பியுள்ள ஆவணம் ஒன்றிலும் 2025 பெப்ரவரி மாத இறுதியிலிருந்து மார்ச் மாதத்தின் துவக்கம் வரை இந்த திட்டம் நடத்தப்பட இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூரிலேயே பல எலக்ட்ரீசியன்கள் இருக்கும்போது இப்படி ஆல்பர்ட்டா மாகாணம் வெளிநாட்டிலிருந்து பணியாளர்களைக் கவர திட்டமிட்டுள்ள விடயம் தங்களைக் குழப்பமடையச் செய்துள்ளதாக சம்பந்தப்பட்ட துறை சார்ந்தவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# தொலைபேசி வழி மோசடிகள் ரொறன்ரோ நகரில் அதிகரிப்பு

கனடாவின் ரொறன்ரோ நகரில் தொலைபேசி வழியான மோசடிகள் இடம் பெறுகின்றன என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்று போலியாக தொலைபேசி அழைப்புகளை ஏற்படுத்தி மோசடிகள் இடம்பெற்று வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ரொறன்ரோ பொலிஸார் ஊடக அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்களை போன்று தொலைபேசியில் உரையாடி நபர்களின் தனிப்பட்ட விபரங்கள் திரட்டப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் நிலைய இலக்கத்திலிருந்து அழைப்பு ஏற்படுத்துவது போன்று ஏற்படுத்தப்படுவதாகவும் உண்மையில் அவ்வாறு அழைப்புகள் ஏற்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.




சிலர் இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக தகவல் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறி தகவல்கள் திரட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மோசடிகளில் ஈடுபடும் நோக்கில் இவ்வாறு தகவல்கள் திரட்டப்படுகின்றன எனவும் இது குறித்து மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆண்டில் கனடாவில் விநியோகம் செய்யப்படும் பொதிகளை பெற்றுக் கொள்ளும் கனடியர்களில் பத்தில் ஒருவர், பொதிகள் களவாடப்பட்டதாக முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரையில் ஆங்கியுஸ் ரைட் என்ற நிறுவனம் கருத்துக்கணிப்பு மேற்கொண்டுள்ளது.

இதன் போது 67 வீதமான வாடிக்கையாளர்கள் பொருள்கள் களவாடப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

வீடுகளுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படும் பொதிகளும் இவ்வாறு களவாடப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

அநேகமான சந்தர்ப்பங்களில் இவ்வாறு பலர் பொதிகளை இழக்க நேரிட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.





# தீப்பற்றி எரிந்த வீட்டுக்குள் புகுந்து மகனை காப்பாற்றிய தாயின் துணிவு

கனடாவின் ஒட்டோவா பகுதியில் பெண் ஒருவர் தனது மகனை காப்பாற்றுவதற்காக தீப்பற்றி எரிந்த வீட்டுக்குள் புகுந்து மகனை மீட்க முயற்சித்துள்ளார்.

43 வயதான ஸ்டெப்னி மெக்டோவ் என்ற பெண்ணே இவ்வாறு தனது மகனை காப்பாற்றுவதற்காக வீட்டுக்குள் புகுந்து தீக்காயங்களுக்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

11 வயதான மகனை தீ விபத்திலிருந்து காப்பாற்றும் நோக்கில் இவ்வாறு துணிச்சலாக வீட்டுக்குள் புகுந்துள்ளார்.

எவ்வாறெனினும் தீ விபத்து காரணமாக இருவரும் அறைக்குள் சிக்கிக் கொண்டிருந்த நிலையில் தீயணைப்பு படை வீரர்கள் தாயையும் மகனையும் மீட்டுள்ளனர்.

தீ பற்றி கொண்டிருந்த நிலையில் உயிர் ஆபத்தை கருத்தில் கொள்ளாது, இந்தப் பெண் வீட்டுக்குள் புகுந்து மகனை காப்பாற்ற முயற்சித்துள்ளார்.

இந்த விபத்தில் சிறுவனும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறு எனினும் மத்திய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது பல்கலைக்கழகங்களை வெகுவாக பாதிக்கும்எனசுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் விசா எண்ணிக்கையை குறைப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 10 வீதத்தினால் குறைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை குறைப்பானது பல்கலைக்கழக கட்டமைப்பில் தாக்கங்களை ஏற்படுத்தும் என கனடிய கல்லூரிகளின் ஒன்றிய தலைவர் பாரி ஜான்சன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை குறைப்பானது கல்லூரிகளுக்கான வருமானத்தை குறைக்கும் எனவும் இது பின் தங்கிய கனடிய மாணவர்களின் கல்வியில் பாதிப்பினை உருவாக்கும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வெளிநாட்டு மாணவர்கள் கனடாவில் கல்வியைத் தொடர்வது குறைந்து வருவதாகவும் வேறு நாடுகள் நோக்கி நகரத் தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.